உ

ஸ்ரீ அறம்வளர்த்தநாயகியார் துணை.

# ஸ்ரீ நடராஜா கீர்த்தனை

குலசேகரபட்டணம் கோயில்

தேவாரப்பணிவிடை

இராமநாத ஓதுவாமூர்த்தியவர்கள் குமாரர்

சிவசிதம்பரஓதுவாமூர்த்தி அவர்களால்

பாடப்பட்டது.

திருநெல்வேலி பஜனைமடம்

ஸ்ரீமான் சிதம்பரம்பிள்ளையவர்களால்

பரிசோதிக்கப்பட்டது.

௸ ஓதுவாமூர்த்தி சகோதரர்

ரா. ம. குமாரசுவாமிபிள்ளையவர்களால்


திருநெல்வேலி

...ம் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

1916

OFFICE OF THE REGISTRAR
4 JUL 1916
MADRAS

023:417
N16
17705



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 - JUL 1916

உ

ஸ்ரீ அறம்வளர்த்த நாயகியார் துணை.

# ஸ்ரீ நடராஜா கீர்த்தனை.

ஸ்ரீ விக்கினேஸ்வரர் கீர்த்தனை. இராகம். கேதார கௌளம்.

தாளம் ஆதி.

பல்லவி.

வினாயகாசரணம்-விக்கினேஸ்வர-வினாயகாசரணம்.

அநுபல்லவி.

அனாதயசின்மயவானந்தவல்லி-கனாதயவுடனீன்றகணபதிதேவ [வி]

சரணம்.

தேவர்முனிவர்களைத் தீங்குகள் விளைக்குந்
திருவருட்பாங்கிலாச் சினத்தகஜமுகனை
நாவினாற்றுதிசெயு நண்பர்கள் பொருட்டாய்
நான்றவாய் முகங்கொண்டுநாஸ்தியாகச்செயும் [வினாயகா]

அற்புதமாக நின்னிளையவனுடனே
யானந்தமாய் விளையாடல் புரியுமெல்லை
செப்புதற்கரிய சிவன் கையில்க்கனியைச்
சீக்கிரம் வலஞ்செய்து திருப்தியுடனே பெற்ற [வினாயகா]

அண்டரும் யாவருமன்புடன் துதிக்க
வாகமவிதியினாலர்ச்சனை புரியுந்
தொண்டரை யாட்கொளத் துலங்குமூஷிகத்திற்
சுகவடிவா யெழுந்தருளிய தேவ. [வினாயகா]

ஸ்ரீ சுப்பிரமணியர் கீர்த்தனை. இராகம் மோகனம். தாளம் ஆதி

பல்லவி.

கந்தசுவாமி நீ-கருணை வை யென்மேல்-கந்தசுவாமி நீ.

அநுபல்லவி.

வந்துபோ யலையு-மன்னுயிர்கள் காக்க
சிந்து தீரந்தனிற்-திர்ப்தியோடுறையுங் [கந்தசுவாமி நீ]

சரணம்.

எந்தவேளையு—முந்தன் சன்னிதியில்
வந்தனை செய்யன்பர் பந்தியோடுஞ்சேர்த்து
நொந்த போகந்தனிற் சிந்தைநைந்துருகுந்
தொந்தநீக்கி யென்னைச் சொந்தமாக்கிக்கொள்வாய் [கந்தசுவாமி நீ]

கஞ்சனேவி விட்ட-வஞ்சகச் சகட்டை
பஞ்சுபோல் பறக்க விஞ்சையாலுதைத்து
நஞ்சரவந்தன்னிற் செஞ்சவேதுயில் கொள்
மஞ்சமால் மருகா அஞ்சலென்று ஆள்வாய் [கந்தசுவாமி நீ]

ஆலகாலவிஷஞ்—சாலவே புசிக்கும்
நீலகண்டர் பாலா-வேல்கை யேந்தும் லோலா
நாலுவேதமாதத்-தால் விழங்குஞ்சீலா
மூலபெந்த நீக்கக்-காலமிப்போது வாராய் [கந்தசுவாமி நீ]

இராகம் கல்யாணி. தாளம் சாப்பு.

பல்லவி.

ஷண்வதனசாம்பசிவ-சற்குருதயாநிதியே (ஷண்)

அநுபல்லவி.

எண்ணரியவன்பர்களு—மின்பமுடனன்புசெயும் (ஷண்)

சரணம்.

வீரகன தண்டையணி-மேவுஞ்செந்தில் மாநகரில்
சீரமருஞ் சுப்பிரமண்ய-தேசிகா கிருபைசெய்வாயே (ஷண்]
கறையணிந்த கண்டரெண்டோட்-கடவுளர்க் கமைந்தபாலா
பொறையணியுந் தொண்டரிடத்-துறையும்வடி வேல்முருகா (ஷண்)
பாலசிவ சுப்பிரமண்ய-பாதபங்க யம்பணிந்தேன்
கோலகுடர் நோயைநீக்கிக்-கூவி யெனையாட்கொள்வாயே. (ஷண்

இராகம் பைரவி. ஸ்ரீபரமேஸ்வரர் கீர்த்தனை தாளம் ரூடகம்

MADRAS.

பல்லவி.

சந்திரசேகரா ஹரா—தர்மவர்த்தனி-பாகா (சந்)

அநுபல்லவி.

இந்திராதி தேவதைகளு-மிரவும்பகலும் வந்தனம்செய்யும் (சந்)

சரணம்.

மாமதுரையிற் கோமனுக்கு-மருவியவிளையாட லெட்டெட்டுந்
தீமைநீங்கும் பேரின்பத்தவர் திருத்தமாக வுருகித்துதிக்கும் (சந்)
தாருகாவன ரிஷிகளேவிய சற்புலித்தோல் தரித்துடுத்துப்
பாருலாவிய மழுவையேந்திப் பதத்தினில் முயலகனைமிதித்த (சந்)
பத்திபுரியு நாவலூரன் பாடல்கேட்க வன்புகொண்டு
முத்தர்பரவும் பரவைவீட்டினில் முதிருமிரவில்த்தூதுசென்ற (சந்)

இராகம் தோடி. ஸ்ரீ நடராஜா கீர்த்தனை. தாளம் ஆதி.

பல்லவி.

மனமே சுகி மன்றுள் நடனம்—மனமே சுகி

அநுபல்லவி.

தினமே யன்பர்கள் சிந்தை மலரிட்டுத்
திவ்விய மாய்த்துதிக்கும் செம்பொற் பாதம்நாடி (மன)

சரணம்.

அல்லலோடுறு மகிலபாசங்க
ளகலவேண்டிடி னன்பினோடுங்கேள்
கல்லிரும்பினுமுன் கடுமைநீத்துருகி
கனகசபையாடுங் கமலபாதநாடி (மன)
மாமறைகள்பன்னும் வஸ்துநிச்சயஞ்செய்தும்
மாதவர்கள்வாக்கு மற்றதுபோல்கேட்டும்
காமமாதியாறுங் கைவிடாதமென்னே
கருணைநிர்த்தஞ்செய்யுங் கர்த்தர்பாதம்நோக்கி (மன)
தில்லைவாழ்திரி சகஸ்திரர்பூஜிக்கவும்
தேவியுமன்பொடு சித்தமகிழ்கொள்ள
கல்லைப்போன்றநெஞ்சங் கனியதாகவே
கனகநிர்த்தனத்தை கண்டுருகிநின்று (மன)

இராகம் பைரவி. தாளம் ரூபகம்

பல்லவி.

திரிபுரசம்மாரா-திருச்சிற்றம்பலம்வாழ்—திரிபுரசம்மாரா.

அநுபல்லவி.

கரிமால்மலரவனுமின்னங்-கழலடிமுடிகாண [திரி]

சரணம்.

அல்லும்பகலுமுனையன்றி வே-றியார்துணையு மறிந்திலேன்
கல்லிலுந்தாழ் வுடையேனையுங்-கைவிடாது காத்தருள்வாய் [திரி]
தேகேந்திரிய கரணங்களை-திரிபினோடும் யானெனதெனும்
சோகாதிதுன்மாயைநீத்தெனைத்-தொழும்பரோடிருத்தியாள்வாய்
மாமுனிவர்கள் நேசிக்கமறையோர் மூவாயிரர் பூஜிக்க [திரி]
காமஞ்சூடுங்குழல் மாதுமை-தாபகிழ வாடல்புரியுங் [திரிபுர]

இராகம் சங்கராபரணம் தாளம் அடதாளம் சாப்பு

பல்லவி.

தில்லைநடனராஜா-யென்முகத்தைநீ-திரும்பிப்பார் பிராணேசா

அநுபல்லவி.

எல்லையில் முனிவரெம் மீசாவென் றேத்திடு
மின்பமோ டோர்பதந் தூக்கி நடனஞ்செய்யுந் [தில்லை]

சரணம்.

மும்மலச் சேற்றினில் மூழ்கிக் கிடக்குமெனை
மோகச் சமுத்திரமா முண்ட பிறப்பில்தள்ளி
நிர்மலமாம் பிர்ம்ம நித்தியத்தை மறந்து
நீந்தவோர் புணையின்றி நிற்கும் புணரிநீங்க [தில்லை]
ஆணவக் காட்டி லலைந்து திரிகின்ற
ஐம்புல வேடரா லார்ப்புண்டெனை நீக்கி
வீணவ நாளின்றி வேதமு டிப்பொருளை
விஸ்தாரமாக விளம்பக் கருணை கூர்ந்து [தில்லை]
தில்லை மூவாயிரர் பூஜையில் நேசமோ
சிவகாமி அம்மையோ டின்புறல் பாசமோ
யெல்லையில் வினையேனை யீடேற்றல் தோசமோ
யென்சொல்நின்செவிக்கேறு தின்னதென் றறிந்திலேன் [தி]

இராகம் தன்னியாசி தாளம் ரூபகம்

பல்லவி.

குஞ்சிதபாதா-மலர்க்கொன்றை சூடு நாதா [குஞ்சிதபாதா]

அநுபல்லவி.

நெஞ்சில் வஞ்சகமின்றி யடியார்-நித்தியானந்த மெனத்துதிக்கும்

சரணம். [குஞ்சித]

அண்டர் முனீவ்வராருமரகர வெனத்துதிக்க
தண்டைசிலம்பிணை சைகுலுங்கத்தாம் தாம்வேறிலையென்றாடுங் [கு]
கண்ணில் வெள்ளம் பொழிய காதலன்பர் துதிபாட
யெண்ணிலானந்தம் பரவ நின்றுயிசைவிடாமல்நடனமாடுங் [குஞ்சி]

திங்கள் கங்கையாடத் திகழரவமுடனுடை
நங்கையாள் சிவகாமி நாட நானே யுள்ளவனென்றாடுங் [குஞ்சித]

இராகம் மாஞ்சை தாளம் அடதாளசாப்பு

பல்லவி.

நடராஜனை-நீ நினையகமே-நெஞ்சே நமபயமினியேதுமில்லை சுகமே.

அநுபல்லவி.

திடமாகவே யிருவர் துதிக்க-செம்பொற் சேவடி தூக்கி
நின்றாண்டவஞ் செயும் [நடராஜனை]

சரணம்.

எண்ணில் முனிவர்கள் நாடவு
முயரிந்திராதி தேவர்கள் பாடவும்
கண்ணிலானந்தநீர் சாடவுமன்பர்
கனக சபையில் நடமாடவும்பதி . [நடராஜனை]

அப்பன் கிருபாநிதியல்லவோ
அவனழகான நாமத்தைச் சொல்லவோ
தப்புறுமாயையை வெல்லவோ அருள்த்
தாண்டவ நாம்காண நல்லவோ செயும் [நடராஜனை]

மாலயன் வாத்தியங்கள் தாக்கவுமன்பர்
மலினகாரணங்கள்போக்கவும்
சீலமுறுமம்மைநோக்கவும்புகழ்
தில்லை நடனலோவாலியார்க்கவும்புரி [நடராஜனை]

இராகம் மனோகரி — தாளம் ஆதி.

பல்லவி.

நித்தியானந்த சுகசாகர நிர்த்தனு நீ
யிப்போதே வந்தென்னை யாள்வாய் [நித்தியான]

அநுபல்லவி.

சத்தியஞ்ஞானந்தானந்த பரிபூரண
சாட்சாத்கார வனுபவத்தோர்களும்
சச்சிதானந்தரூபனேசாத்விக
ரூபதற்சாக்ஷி யெனத்துதிக்கும். [நித்தியான]

சரணம்.

சீருலவுங்கல்லால் நீழற்கீழ்ச்செய்யு
மாதவத்தோர் நால்வருக்கும்
யேருலவுமறமுதல் நான்கையு
மின்பமோடனுக்கிரகித்தருளியும்
தாருகாவனக்கற்புமாதர்களைத்தத்தளிக்க
மனங்குழையச்செய்ததும்
நீருலாவுசெஞ்சடை முடியசைவோடு-நின்
மலயாமுமை காண நிருத்தஞ்செயும் [நித்தியா]

இராகம் சாவேரி — தாளம் ஆதி

பல்லவி.

அகண்ட பரசிவமே நடனஞ்செயுமழகிய நடராஜா

அநுபல்லவி.

திகண்டவியாக்கிர பதஞ்சலிக்காகவே தித்தி தித்தி மித
திரிகிட தக ததிங்கிணத்தோமென் [அகண்ட]

சரணம்.

தேவர்முனிவர்களுஞ் சிவசிவவென்று
சிந்தையுருக்கமுடன் சிறந்தினி துதிக்கத்
தாவிலரி பிரமர்தாள மேளங் கொட்ட
தயவுடனே கிருபைதாண்டவம்புரிய [அகண்ட]
திருவுமெய்ப்பொருளுஞ் செல்வமுமோங்கத்
திகழ்மூவாயிரவர் தினந் தினம் பூஜிக்க
வருமையாகிய பொன்னம்பலந்தனிலே
ஐந்துகிர்த்திய விளையாடலருள்புரிய [அகண்ட]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS

மெய்மையாக வடியார்களுருக்க முடன்
விருப்பமோடு ஹரகரவெனத்துதிக்க
யெம்மையாளுஞ் சிவகாமி மகிழ்வு பெற
இன்பமோடு பதந்தூக்கி யன்பு பெற [அகண்ட]

சிட்டசுரம்.

சா-ரிசநித-சநித-நிதபம-கரிச-ரிமபமப-தசநிதபமபத-
சரிகாரிச-நிதபத-ரீசநிதப-மபதசநித-நிதபம-கரிச-ரிமப[அக

இராகம் கமாஸ் தாளம் சாப்பு]

பல்லவி.

கனகசபை திருநடனம்-கண்டவுடன் வல்வினைபோம்.

அநுபல்லவி.

சனகன்முதல் முனிவோர்களால்த்
தன்மபமாய்த்துதிகள் செயுங் [கனகசபை]

சரணம்.

நாரதரும் யாழ்வாசிக்க—நந்தி மத்தளங்கள்போட
பாரகத் தடியர்கணம்—பத்தியினால்த் துதிகள் செயுங் [கனச]
அன்பன்வாதவூரனிடத்-தடிகள் வருந்தும்படிச்சென்
றன்புகழ்பெற்றிருவாசகந்-தான்லிகிதஞ்செய்தருளுங் [கனக]
இரவு பகலின்பமுட-னெழில் மூவாயிரவர் பூஜிக்க
திறமுடையபாதந்தூக்கி-திமிதத்ததிங்கிணத்தோமென்று(க)

இராகம் பிலகிரி தாளம், அடதாளசாப்பு

பல்லவி

மறவாதிருமனமே-மன்றுள் நடனம்-மறவாதிருமனமே.

அநுபல்லவி.

நறவமலர் கொடுசுரர்க ளன்பொடு-நாடியே-வோடியே
தேடியே-பாடியே-நாட்டமுடனே வற்சிக்கும் பதநடம் [மற]

சரணம்.

வந்து வந்து போய்ச்-சென்மத்தில் வீழ்ந்து
மாய்தலின்றி நன்-மார்க்கஞ்சொல்வேன் கேள்
யெந்த நேரமு-முன் சிந்தை யுருக்கி
யேகாந்தமோடு நல்லார்வம் பெருகி

யிந்துவாழ்சடை முடியனே
  வன்பரிதய கோயில்கொண்டுடையனே
யெந்தையே யெம்மானே யென்று நல்
  லின்பமோ டெதிர் நின்று துதிசெய்து [மறவா]

அண்டகோடிச ராசரமீரு யங்கங்கே
  வுயிர்கட்குயிராய் நின்று
கொண்டதொரைந்து கிர்த்தியந்தன்னை
  குறைவு பாடின்றி நடாத்துஞ்செயலை
கண்டுகண் களிகூர்தருஞ்
  சுரர்களை கணையென வொலி யொடுந்
தொண்டர்துதி செயவம்பலந்தனிற்
  றாக்கியோர் பதமாடும் நடனம் [மறவா திரு]

தூலசூக்கும காரணதேகச் சுழுத்தி
  சொற்பன சாக்கரந்தன்னில்
சாலமாகும் விஸ்வன் தைசன் பிராக்ஞன்
  தக்கபிமானிலுந் தற்பதமற்றுங்
கோலமான சுயம்பிரகாசமாய்
  கூடிநின்று நில்லாமல் விளங்கும்
கால காலன் கனகசபை தனிற்
  கண்டு வுமை மகிளாடு நடனம் [மறவா திரு]

இராகம் சுருட்டி தாளம் ரூபகம்

பல்லவி.

எனையாதரிப்பா-யெல்லையிலானந்த நடனா [யெனை]

அநுபல்லவி.

வினையாவுமோர் மாத்திரைதனில்
வீய்ந்திடவே-விரைவில் நோக்கி வந் [தெனை]

சரணம்.

நீலகண்டனே-திகழ்நித்தியமுக்தனே
காலகாலனே தமியனைக் கைவிடாது கடைக்கணுக்கி வந் [தெனை]
மங்கை பாகனே-அன்பர் மனதிலேகனே
செங்கையாற் கொண்டஞ்சலென்று நற்றிருவடிமுடிசூட்டியருளி
திங்கள்கங்கையு-நாகஞ்சேருமுடியனே [யெனை
கங்கைமாது நோக்கிமகிழ நடனம்புரியும் பாதனே யிப்போ [யெனை

இராகம் கல்யாணி　　　　தாளம் சாப்பு

பல்லவி

வந்தெனையாண்டருள்-மாநடராஜனே நீ　　[வந்தெனை]

அனுபல்லவி,

நிந்தனையோடுறு-நிகிலபாசமதில்
நொந்துடையேனை-நொடிப்பொதினில்.　　[வந்தெனை]

சரணம்.

நிந்தனே-சுத்தனே-புத்தனே-முத்தனே
கர்த்தனே-நிர்த்தனே-கன்மிகட்கெத்தனே
சத்தனே-தாணுவே தாசர்கள் நேசனே
வித்தனே-வேதனே பேதினிதனிலே.　　[வந்தெனை]

ஆதியே-மத்தியே அந்தமே-மூன்றிலா
சோதியே-துன்புளோர் துணைவனே-பிணையிலா
நீதியே-நிட்களா நிமலமா-மம்மையோர்
பாதியே-பாவியேன் பாழ்வினை யெய்திடா.　　[வந்தெனை]

தில்லையில்-வாசனே-சிவகாமி-நேசனே
யெல்லையில்-நாமனே யெழில்தரு-ரூபனே
தொல்லைவாழ்-நாதனே-சுந்தரர்-தூதனே
கல்லினும்-வலியகங்- கரையவே-நோக்கி நீ　　[வந்தெனை]

இராகம் பந்து வராளி　　　　தாளம் ஆதி

பல்லவி

என்று காண்பேன்-பொற்பாதம்-என்று காண்பேன்

அநுபல்லவி

நன்று நன்றெனவியாக்கிரபதஞ்சலி
நாடியன்பொடுதுதிக்குநடனபதம்　　[என்று]

சரணம்.

சங்குசக்கர கரதாரியுமலரோன்
றனுமாமுனிவர் தாழ்வுடன்றுதிக்க
யெங்குநிறைவுதருமானந்தம் பொழிய
யின்பமோடருள் செய்தாடு நடனபதம்　　[என்று]

தில்லைவாழுமூவாயிரர் பூஜித்து
திரிவித கரணமுருகி நின்றார்ப்ப
யெல்லையின்றிய பிரமானந்த மாந்தனை
யேகமேயென நின்றாடு நடனபதம் [என்று]

கங்கையோடு அம்புலி யசைந்தாட
கானவாத்தியமொ டன்பர்கள் பாட
நங்கைமாது சிவகாமியு நாட
நாதனுருமவள் பார்வை யோடாடல்பதம் [என்று]

இராகம் இந்துஸ்தானி பியாக்கு தாளம் ரூபகம்.

பல்லவி.

குஞ்சித பாதங்கண்டால் சஞ்சிதமாய்ந்திடுமே [குஞ்சித]

அநுபல்லவி.

தஞ்சமென்றோரைக் காக்கு நல் [குஞ்சித]

சரணம்.

மாலயன்றேடற்கரிய-மன்றுளாடிய [குஞ்சித]
தன்னடியார் ஜென்மங்களை-தவிர்த்தாண்டருள் [குஞ்சித]
தண்டை சிலம்போசையுடன்-றாண்டவஞ் செய்யும் [குஞ்சி]
சீர்மருவுமம்மை சிவ-காமி மகிழ்ந்திடும் [குஞ்சித]

இராகம் பியாக்கு தாளம் ஆதி

பல்லவி.

கனகசபேசனை-நினைமனமே-அவன்
காலன் வந்தாலுதைப்பானிது-நிசமே [கனக]

அநுபல்லவி.

தினகரன்போல் மார்க்கண்டனு மன்பொடு
செய் சிவபூஜையில் வீசிய பாசனை
சினகரத்தோடடனன்பவன் பொருட்டு
செம்பொற்பாத மலர் தூக்கி நின்றுதைக்கும் [கனக]

சரணம்.

சமைய குரவர் நால்வருக்குபதேசித்து
தன்னடிக்கீழ் குடிகொண்டருளபவனே
யிமையா நாடருமிசைவொடுந் துதிக்க
யின்பமோடு பதந்தூக்கி நடனஞ்செய்யும் [கனக]

கருவிகரணங்களில் நின்றசைத்தொளிருங்
கறைமிடற்றண்ணல் பொற்பாதங்கள் பரவி
அரிவிபாயு மெனக்கண்பனி சோரும்
அன்புடையார் கணத்தோடு நின்றுருகி [கனக]

பந்த பாசங்களின்பற்றதை நீக்கும்
பரமசாதுக்களும் பண்புடன் பணிய
சந்ததமுஞ் சிவகாமியை நோக்கித்தானே
யேகமென்றே நடமாடிய [கனக]

---

## ஸ்ரீ அம்பாள் கீர்த்தனம்.

இராகம் கமாசு தாளம் ரூபகம்.

பல்லவி.

காணக் காணக்கனியுதே-வுன் கமல பாதங்களைக் கண் [காண]

அநுபல்லவி.

சேணுயர் வானவர் முனிவருஞ்
செய செயவெனத் துதிக்குமம்மணி [காண]

சரணம்.

உனதாமடியர் குழாங்களொன்று படவகமுருகி
உடல் பொருளாவி மூன்று முன் கைவசமொப்புவித்து
தனதாஞ்சொரு பஞ்ஞானத்தாரணை செய்து நாளுஞ்
சன்மார்க்கத் தன்பர்கட்கு தயவுசெய்தருள்தற்பரியே [கா]

செந்தாமரைமலர் போலுன் திருவடி தெரிசனசுகத்தை
சிந்திக்காதவர்கள் தன் சென்மஞ்சாபல்யமாமோ
பந்தம தாஞ்சமுசாரப்பற்று நீங்கி வுன்னடியன்பரவிப்
பணிந்தேத்தும் வகை பாலித்தருள் பார்பதியே [காண]

நிலைபெறவே வுள் நினைந்து நீக்கரியதேகாதிகளை
நேதி நேதியென செய்து நில்லென்று னன்பர்கட்குத்
தலைபாமறை முடிவிளங்குந் தற்பதார்த்த சொருபத்தைத்
தத்தொம சிவோர் மொழியாற்றனை போடருள்தர்ம
வர்த்தனி [காண]

இராகம் சாரங்கம் தாளம் ஆதி

பல்லவி.

வாய்திறந்தொரு-வார்த்தை சொல்லு வாயுன் [வாய்]

அநுபல்லவி.

மாய்தலின்றி மாவடியில் விற்றிருக்கும்
வல்லி தர்ம சம்வர்த்தனி கனியிதழ் [வாய்]

சரணம்

மங்கை நாரணி நங்கை பார்பதி மாசுடை
அஞ்ஞானமாம் வடிவெனை
செங்கையால்ப் பரிசித்தலாதி செய்து
திவ்வியமான வுன்-புன்முறுவலோடு [வாய்]
திங்கள் வார்சடைத்-தெய்வ நாயகன்
தேவியே யுன்-பாதஞ் சேவை செய்து நின்றேன்
அங்கை கொண்டு நல்லந்ர லென்றெனக்
காதரவினைடைமுர்தமாகுந்திரு [வாய்]
நான் கபாவமாம் நாம ரூபங்களை
நம்பி மோசமாகி நான் மயங்கினேன்
மான்மழுக்கரத்தர் வாம பாகவல்லி
மாணிக்கவதரமல்கு மசைவோடு [வாய்]

இராகம் சங்கராபரணம் தாளம் ரூபகம்

பல்லவி.

அம்மாவருள் செய்வா யறம்வளர்த்தம்மா வருள்செய்வாய்

அநுபல்லவி.

பெம்மான் கச்சியப்பர் நாயகி-பேதையேனைக் கடைக்கண்பார் [அம்]

சரணம்

ஆதிபராசக்தியே யுன்னை யன்பினால் துதிக்குமடியர்
பாதமலரை யர்ச்சித்துருகும் பக்திபுரியப்பாலஸ்கந்தன் [அம்]
உத்தமமாகின்ற வுன்புகழ் றுதிபாக வுட்கொள் செவியும்
நத்திவானவரடையு நின்பத நாடுங்கண்களுமிப்போதே [அம்]
செல்வம் பொலியுந்தென் குலசையில்ச் சேர்ந்த மாவின்
கீழடியிலல்லல் நீங்கும்டியவர்கட்கு வருளவன்பினால்வதியும்
[அம்மா]

இராகம் பியாகடை தாளம் சாப்பு

பல்லவி.

அம்பா தர்மவர்த்தனி தாயே-அம்பா தர்ம வர்த்தனி தாயே.

அநுபல்லவி.

சம்புதாணுபால்-தற்பரி சங்கரி [அம்பா]

சரணம்.

உம்பர் வாழ்புகழுங் கம்பமாகிய
லன்பரை ரட்சிக்க யின்ப பூசனை செய் [அம்பா]
நாதர் நீலகண்ட நாயகியே வுந்தன்
பாதபொற்கமலம் பற்றினேன் கௌரி [அம்பா]
மாவின் கீழடியில் வந்து வீற்றிருந்து
தாவிலன்பர்கட்குத் தயவுசெய்தருளும் [அம்பா]

இராகம் தேசிகதோடி தாளம் ஆதி

பல்லவி.

தாயே தர்ம வர்த்தனி-தாயே தர்மவர்த்தனி

அநுபல்லவி.

நீயே தஞ்சமே யன்றி-நித்தியர் பங்கில் வாழும் [தாயே]

சரணம்.

கங்கை முடித்தவேணிக் கடவுள் பாகத்தில் வாழுன்
பங்கயப்பதமன்றிப்-பற்றிடம் நாடேன் [தாயே]

கஞ்சவிலோசனி-கருணை மனோன்மணி
    யஞ்சலென்றருள்வாயே-அறம்வளர்த்த தேவி [தாயே]
பார்பதி தேவி—பக்த சனரட்சகி
    சீரடியாரைக் காக்கும் திவ்யபரி பூரணி [தாயே]

இராகம் ஆனந்தவல்லி தாளம் சாப்பு

ப ல் ல வி.

ஆனந்தவல்லி-யருள்பாலிப்பா யறம்வளர்த்தா-ளம்மை பூரணி

அ நு ப ல் ல வி.

மோனந்தனில்-விளங்குஞ் சொரூபி-மும்மலரகிதர் முற்றுணர்நிரூபி
[ஆனந்த]

ச ர ண ம்.

மங்கையர்க்கரசி-மணிமகுடதாரி
    மனமில்ஞான யோகர்-மருவும் நாரணி
அங்கயற்கணம்மை-யற்புத பிராமி
    யன்பிலாதடியேற்-கருள் செய்காரணி [ஆனந்த]
நித்திய கல்யாணி-நிர்மலர்கள் காக்ஷி
    நித்த சுத்த புத்த-முக்தி-மாக்ஷிமையே
சத்தியக்ஞான ரூபி-சர்வலோக சாக்ஷி
    தயவு கூர்ந்தெனையுந்-தாங்கி ரக்ஷிப்பாயே [ஆனந்த]
எண்ணிறந்திரவி-யிங்குதித்தல் போல
    யெழில் கொள் சோதி மன்னு மிணையில் சுந்தரி
பண்ணிறைந்த மூவர் பனுவல் பாடுந் தொண்டர்
    பணியுந் தென்குலசைப் பதிவளரந்தரி [ஆனந்த]

இராகம் ஆரபி தாளம் ரூபகம்

பல்லவி.

அறம்வளர்த்தாளே யடியேற்கருளம்பிகையே [அறம்]

அநுபல்லவி.

திறமுடைய அடியார் கணந்தினமும்பூசித்துருகித்துதிக்கும் [அறம்]

சரணம்.

அகிலாண்டநாயகி யளவில் நாமத்ததிரூபிணி
நிகிலாதிப் பாசம்விட்டுனை நீக்கமின்றித்தியானஞ்செய்ய [அறம்]
மறையாகம மாதிகளின்னம் வருந்திப்புகல்தற்கரியபொருளே
சிறையாகுமிம்மோகம்விட்டுனைச் சேர்தல்காலமிதுவென்றறியேன்
ஆதாரம் யாதொன்றிலேனுன்னடிகளன்றி யன்பர் வணங்கும்
பாதார விந்தமலரைப் பாலித்தடியேன் பணிகைக்கொண்டு [அறம்]

இராகம் சுருட்டி. தாளம் ரூபகம்

பல்லவி.

கருணாகரியே தமியேனைக்-காத்தருள் செய்வாயே [கருணா]

அநுபல்லவி.

வருணாதி நான்கினடியர் வணங்கி யுருகித்துதிக்கும் [கருணா]

சரணம்.

அண்டர்கள் தமதிருகை குவித்து வற்புதமே யழகே கச்சி
கொண்ட பாண்டி யீஸ்வரனமருங் கோடமர் வல்லியே
பண்டடியர்க்கருள் புரியும் பரமேஸ்வரி யெனத்துதிக்குந்
தொண்டர் கணத்தோடிருத்தி யென் சிறந்துணைமலர்ப்பதஞ்
சூட்டிடுவாய் [கருணா]

மாயாபுரிக்கோட்டை யதனுள் வல்லிருள்தனில் மூழ்கிக்கெடுங்
காயாதிந்திரியம் யானெனக்கருதி யுள்ளமருண்டேன்
தாயாகி வந்தஞ்சலென்று நற்றயவுசெய்து வருள்புரிவாய்
நாயாகினுங் கடையவன்னி நமன்றனக்காளாய் விடாமல் [கருணா]

கல்லேனுமுன் தொண்டர் வாயலிற் கால்மிதிக் கவுரியேனதை
யல்லேன் பிறந்தென்ன பலனையடையும் வழியறியேன்
சொல்லேல சிவநாமமடியர் சூழ் குலசைப்பதியினில் வாழ்
நல்லேல யறம்வளர்த்தாளுனை நாடிப்பதப்பாட நல்கி [கருணா]

இராகம் ஸ்ரீ தாளம் ரூபகம்

பல்லவி.

பரதேவி உன்பாத மலரைப்-பணிந்தேனருள்வாய் பார்பதி [பர]

அநுபல்லவி.

சிரமீரைந்தறக்கன்றோள்வலி-தீர்த்தோனுகத்தைச்சேரப்புல்கிய

சரணம். [பரதேவி]

நாராயணி-யன்பாவார்க்காதரி
நாகாபரணர்-நாயகி
தீராத ஐம்புல-வேடர்கை சிக்கா-புக்கா நிற்கா
யிக்காலமே யான்வெல்க [பரதேவி]

ஆதாரமுன்னருள் தா தா பென்றன்பர்கள்-வாதாடி
யின்னம் வாழ்த்துகின்றார்
யேதானுமோர்நன்மைதனிலுமில்லேன்கல்லேன்-பொல்லேன்
யெனையாதரிப்போதே [பரதேவி]

சீர்மருவுந்தென் குலசைப்பதிச்செல்வி
தர்மசம்வர்த்தனியே
யோர்மருவுனன்பர் போலெனை-யிறவா-பிறவா-துறவா
யின்பால் செய்வதுன்பாரம் [பரதேவி]

இராகம் இந்துஸ்தானி காப்பி தாளம் ரூபகம்

பல்லவி.

நித்திய கல்யாணி யென்னை நீ வந்தாள்வதெந்தநாள் [நித்திய]

அநுபல்லவி.

பக்திபுரியுமடியர் பரவசமாயுருகித்துதிக்கும் [நித்திய]

சரணம்.

சங்கரி மனோகரி சாமள ரூபிணி உன் கை கொண்டென்
சென்னி வைத்துறுதியாகவோர் சொலுரைத்து [நித்திய]

பால சவுந்தரி பரமதயானிதே காலதூதர் வந்தெனைக்
கலக்குவதர்க் கொருப்படுமுன் [நித்திய]

தென்குலசைப்பதிவாழ் சேர் தர்மவர்த்தனி
நன்குடையவன்பரொடுகொடிக்கடைக்கண்பார்த்தருளி [நித்]

இராகம் கமாஸ். தாளம் சாப்பு

பல்லவி

தர்மசம் வர்த்தனியே-தயவு செய்வாய் [தர்ம]

அநுபல்லவி

கர்மசம் வினையேன்-கலக்கமுறாமல் [தர்ம]

சரணம்

அகண்ட ஸ்வரூபி-அகிலாண்ட தேவி
நிகிலத்தின்மயங்காது-நீ காத்தருள்வாய் [தர்ம]
காருண்யர் பாகி-கருணைப்பிரவாகி
சீரைந்தெழுத்துடன்-சிந்திக்கத்தேகி [தர்ம]
நாதர்கச்சிகொண்ட-நாயகியே வுந்தன்
பாதமலரே யன்றிப்-பற்றிடங்காணேன் [தர்ம]
நித்திய கல்யாணி-நிஜானந்தமோகி
பத்தியுடன் பணியப்-பதமலரருள்வாய் [தர்ம]

இராகம் பிலகிரி தாளம் ரூபகம்

பல்லவி.

சங்கரி கிர்பா நிதியே-தயவுசெய் காத்தருள்வாய் [சங்கரி]

அநுபல்லவி.

அங்கபற்கண்ணுமையே அனுதினமே ரக்ஷிப்பாய்[சங்கரி]

சரணம்.

பொங்கரவம் பூண்ட கச்சி-கொண்ட பாண்டீசர் பங்கி
தங்குமிடம் வேறில்லே-சரணமதே நம்பினேன் [சங்கரி]
மாலுமூடனுன்முகனுன்-மகிமையைக் கண்டறியார்
சாலவடியார் பொருட்டுத்தரணியிலே வருவாய் [சங்கரி]
பத்மருத்ராட்சம் பூண்டு-பணிவுடனைந்தெழுத்தை
திருப்தியுடனே சிந்திக்கத்-திருவடி தந்தருள்வாய் [சங்கரி]

இராகம் சகாண                                                    தாளம் ரூபகம்

பல்லவி.

பரமேஸ்வரியே வுன்பாதம்-பாலித்தருளுவாய்

அனுபல்லவி

புரமேமுன் றெறித்தோனிடம்-பொருந்துமறம் வளர்த்தாளே [பர]

சரணம்.

வேதாகமகலையே-விண்ணவர் முனிவர் நிலையே
பூதாதிகள் தலையே-வுனைப் பொருந்துந் தவமிலையேற்கு [பரமே]

அரிப்பிரமர்களாலு-மளப்பரிய பரம்பொருளே
கருவிலினம் புகுதாவண்ணங்-காத்தெனை யாள்வாளே [பரமே]

மணியே மரகதமே வன்பர் மனதில் வளரிதமே
பணியே கொண்டு தமியேன்றன்னைப் பாலிப்பதுன்பதமே [பரமே]

தென்குலசைப்பதியில் வளர்தெவிட்டா யின்பரசமே
கங்குல்தவிரடியார்கட்குக் கதியீவதுன் துஜமே [பரமே]

இராகம் பியாகிடை                                                    தாளம்சாப்பு

பல்லவி.

தர்ம சம்வர்த்தனி-கேளம்மா-வென் குறைகளை
தயவு செய்தருள் புரிகுவாயம்மா தற்பரி-யம்மா [தர்ம]

அநுபல்லவி.

கர்மதிரி குணமாகும் வினையேனுக்-குன்பதத்தையே
காதல்செய்து துதிக்கவே யருள்வாய்க்-கருணைவாரி [தர்ம]

சரணம்.

அல்லல் தருமகிலப்பிரபஞ்சமதி-லாசித்தல் பற்றி
யாதரவினோடாகியகம் நொந்தேன்-அடியவர்கள்
எல்லவர்கடம் மேவல் பணிகேட்டு-மற்றவர் தங்க
ளிருபதங்களை யிருதயந்தனிலேயின்புறச்செய்வாய் [தர்ம]

ஆரணங்களுமறிய வரியவளே-யன்புடையவ
ரகமதாலயமாக வதிபவளே-யகலவிடுங்
காரணந்தனை நீக்கியடியேற்குக்-கருணையோடு
கமலபதங்களைச்சூட்டி யருள்புரிவாய்கதிகொடுக்கும் [தர்ம]

சோதிசுகலழி தேக சொற் சொரூபி-நிர்க்குணத்தமசால்த்
தூலமாதிய தொண்ணூறாரையும்-யானென்றெருந்தப்விட்டு
வாதிநடுமுடியின்றியுன் சொரூபத்-தனவரத
மகமதாகவே நாடும் வகையருள்வா-யற்புதவல்லி [தர்ம]

இராகம் இந்துஸ்தான் தோடி தாளம் சாப்பு கேதி.

நாமவாளி

சிர்பூத்த சிதம்பர நடேசா-சித்தமென் மீதிரங்குவாயிசா. [சிர்பூத்]
பார் நிரக்கினிவளி பரவுமம்பரமாய்
பானுதிங்களியமான் சொரூபா-பவநீங்க [சிர்பூத்]

இராகம். காபி. தாளம் ஏக.

நாமவாளி.

சங்கரி பார்பதி சாம்ப மனோகரி
இங்கிதமாக வுன்னை யேத்த வரமருள்வாய் [சங்கரி]

இராகம் முகாரி தாளம் ஆதி.

## ஸ்ரீ அம்பாள் கீர்த்தனம்

பல்லவி.

தேவியுன் பாதத்தென்னைச் சேர்ப்பாய்-திருநீலகண்டன் [தேவி]

அநுபல்லவி.

பாவின இசையொடு-பத்தியால் துதிசெயுந்
தாவிலன்பர்கட்குத்-தயவு செய்தருளும் [தேவி]

சரணம்.

அரிபிரமர்கட் கெட்டாதவத்த-னன்பன்பொருட்டுப்
பரியேறி பாண்டியன் முன்னின்று-பல துரங்கமெல்லாம்
நரிகளென்றறியாத நண்பரசன் கரத்தில்
வரியாய்த் தழைந்த கயிர்மாறிக் கொடுத்த ஈசன் [தேவி]

சித்தனென்றோர் திருப்பேர்கொண்டு-திருவீதி சென்று
செய்கைகளெல்லாமாறச் செய்து-திருப்தியுடனே
பத்திபுரியுமந்தப்பாண்டியன் முன்பிருந்து
நத்துக்கல்லானை நற்கரும் பருத்தியபரன் [தேவி]

இன்னிசைப்பாடல்களைப்பகர-மின்பமுறவே
இருகாதி வேரலிகளொரு பக்க-மியல்பாய் விளங்குஞ்
சென்னெல்ப் பொழில்புடைசூழ் தென்குலசைப் பதிவா
ழுன்னையினுமினியவம்மை யறம்வளர்த்த. [தேவி]

இராகம்பிலகிரி. தாளம் ஆதி

பல்லவி.

தாயே தர்மசம் வர்த்தனி-தன்னடியேனைத்தற்காத்தருளுமுத்தமி

அநுபல்லவி.

வாயேபல்கோடி கொண்டு-மறையனந்தங்களின்னும்
நீயே தஞ்சமென்றுன்னி-நின்றுருகித்துதிக்கும் [தாயே]

சரணம்.

அண்டபிண்டங்களெங்குமா-யமர்ந்தழகைக்
கண்டுகளிக்க நேசித்தே-னிக்காதலையுட்
கொண்டு குறை தவிர்த்து-கூத்தாடு மாயை தரும்
பண்டு வினைகள் நீக்கும் பாதமலர்கள் சூட்டி [தாயே]

அல்லும் பகலும் நின்னையே அன்னியமின்றி
நல்லோர்கள் நாடி நிற்கவே-நன்றியோடென்னை
நில்லென்றவர்களோடும் நித்திய சுகத்தை ஈந்து
பல்செனமசஞ்சிதங்கள் பாறவருட்கணைக்கி [தாயே]

பன்முககச் சமயங்கள்-பாங்குடனின்று
நன்குமதிக்கும் தெய்வநீ-நற்புந்தியிலா
என்குடர் வாதையொடு மெழுபவமல்லல் நீத்து
தென்குலசைப்பதி-நற்றேவி அறம்வளர்த்த [தாயே]

முற்றிற்று.

உ

ஸ்ரீ அறம்வளர்த்தநாயகியார் துணை.

# விஞ்ஞாபனம்.

எனது பிதா ஸ்ரீமான் சிவசிதம்பர ஓதுவாமூர்த்தியவர்களாலியற்றப்பட்ட இப்புத்தகம் வேண்டுபவர்கள் இதனடியிற்கண்ட விடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

விலை அணா 1

இங்ஙனம்.

சி. வ. ஆனந்தநடராஜா
வடக்குத்தெரு, குலசேகரன்பட்டணம்.

அ. சி. ஆ. ஆனந்தநடராஜா
அரிசிவியாபாரம், நாலாங்குருக்குத்தெரு,
கொழும்பு.

எஸ். எஸ். ஷண்முகம்பிள்ளை
விஷ்ணுகமிட்டி ஆபீஸ், திருநெல்வேலி.